2. இரங்கல் தீர்மானம்

உறுப்பினர் திரு. ஆர். எட்டியப்பன் மறைவு

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' இனிய பண்பும், நல்ல உள்ளமும், செயல் ஆற்றலும் கொண்டவரும், இப்பேரவையில் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், பெரணமல்லூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினருமாகிய திரு. ஆர். எட்டியப்பன் அவர்கள் 12-10-1989 ஆம் நாளன்று மறைந்த துயரச் செய்தி கேட்டு இப்பேரவை வருந்துகிறது.

அன்னாரின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலை இப்பேரவை தெரிவித்துக் கொள்கிறது.''

10-05 மணி

திரு. எட்டியப்பன் அவர்கள் மாணவப் பருவம் முதல் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய இலட்சியத்திலே ஈடுபாடு கொண்டவராக, திராவிட முன்னேற்றக் கழகச் செயல் வீர ராக விளங்கியவர். மிகவும் அடக்கமான இயல்புடையவர். பொதுமக்களுக்குத் தொண்டாற்றுகின்ற சிறந்த உணர்வோடு மாணவப் பருவத்திலே செய்யாறு அறிஞர் அண்ணா கல்லூரி யிலும் சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும் பயின்று, மற்ற மாணவர்கள் எல்லாம் பாராட்டுகின்ற அளவுக்கு மாணவர் பேரவைச் செயலாளர் பொறுப்பை ஏற்று கடமையாற்றியவர். இயல்பாகவே எளிதாக வாழ்கின்ற ஒரு முறையைப் பயின்றவர். என்னதான் தாழ்ந்த சூழ்நிலையில் தள்ளப்பட்டிருந்தாலும் கூட மக்களுக்குத் தொண்டாற்றுவதில் எந்தவிதமான தயக்கமும் இல் லாமல் மிகத் தீவிரமாகச் செயல்பட்டு, அந்த வட்டாரத்து மக்க ளுடைய நன்மதிப்பைப் பெற்று, ஒன்றியத்தின் பெருந்தலைவ ராக விளங்கியவர். அண்மையில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலிலே சிறப்பான வெற்றி பெற்று இந்த அவைக்கு வந்து, இங்கும் தன்னுடைய கடமையைப் பொறுப்போடு நிறைவேற்றிய ஓர் இளைஞர். 36 வயது முடிந்து 37ஆவது வயதில் தன்னுடைய குடும்பத்தில் மிகப் பொறுப்பான கடமையாற்றும் அந்தக் காலக் கட்டத்தில் எதிர்பாராத விதமாக ஒரு விபத்துக்கு ஆளாகி மறைய நேரிட்டது மிகப் பெரிய வேதனை தரக்கூடிய நிகழ்ச்சியாகும். இந்தப் பேரவைக்கு இப்படிப்பட்ட ஒரு நல்ல உறுப்பினரை இழக்க நேரிட்டது மிகப் பெரிய இழப்பாகும்.

அவருடைய பேரிழப்புக்காக என்னுடைய ஆழ்ந்த வருத்தத் தைத் தெரிவித்து, அவருடைய குடும்பத்திற்கு இந்தப் பேரவை யின் சார்பாக நான் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் தீர்மானத்தைத் தொடர்ந்து முதலில் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுவார்கள்.

*திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த இரங்கல் தீர்மானத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நாங்களும் இணைந்து, எங்களுடைய இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு சில மாதங்களே பணியாற்றுகின்ற வாய்ப்பு பெற்று, திடீரென்று ஒரு கார் விபத்தில் சிக்கி திரு. எட்டியப்பன் அவர்கள் அகால மரணம் அடைந்தது அனைவருடைய உள்ளத்திலும் வேதனை தருகின்ற செய்தியாக இருக்கிறது. ஒன்றியத்தினுடைய தலைவராகவும் அதற்குப் பின்னாலே சட்டமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு 37 வயது நிரம்பிய அந்த இளைஞர் திடீரென்று மறைந்ததால் அவருடைய குடும்பத்தினர் எவ்வளவு பெரிய சோகத்திற்கு உள்ளாகி இருப்பார்கள் என்று நினைத்துப் பார்க்கவே முடியாது.

அவரைப் பிரிந்து வாடுகின்ற அவருடைய குடும்பத்திற்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவரைப் பிரிந்து வாடுகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. கருப்பையா மூப்பனார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் உறுப்பினராக இருந்த திரு. எட்டியப்பன் அவர்கள் மறைவு குறித்து இங்கே கொண்டு வந்திருக்கிற அனுதாபத் தீர்மானத்தில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் கலந்துகொண்டு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

10–10 மணி

வெற்றிபெற்று மிகக் குறைந்த காலத்திற்குள்ளே கார் விபத்திலே அவர்கள் மரணம் அடைந்தார்கள் என்பது மிக மிக வேதனை தருகின்ற ஒன்றாகும். என்னைப் பொறுத்தவரையில் எனக்கு இதற்கு முன் தினத்தில் ஒரு அனுபவம். அவர் மறைவதற்கு முதல் நாளன்று அந்தப் பகுதியிலே நான் சுற்றுப்பயணம் செய்துகொண்டிருந்தேன். நண்பர் திரு. எட்டியப்பன் அவர்களுடைய சகோதரர் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவராக இருந்தவர். இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்புதான் அவர் இறந்துவிட்டார். அவர் இறந்துவிட்டார் என்ற செய்தி கேட்டு அவருடைய இல்லத்திற்கு நான் சென்று துக்கம் விசாரித்தேன். அவ்வாறு அங்கே நான் துக்கம் விசாரித்துவிட்டு வருகிற வழியில், தெருவின்கோடியிலே நண்பர்

1989 அக்டோபர் 30] [திரு. ஜி. கருப்பையா மூப்பனார்]

திரு. எட்டியப்பன் அவர்களுடைய வீடு இருந்தது. நான் அவரிடத்திலும் சென்று விசாரிக்க வேண்டும் என்று போய்ப் பார்த்தேன். அப்போது அவரே வெளியே வந்து என்னைச் சந்தித்துப் பேசியது, அந்தத் துக்கம் குறித்துக் கூறியது எனக்குப் பசுமையாக நினைவில் இருக்கிறது. அன்றைய தினம் இரவே அவர்கள் இத்தகைய விபத்துக்கு உள்ளாகியது என்பது மிகுந்த வேதனைக்குரிய ஒன்றாகும். இந்தத் துயரத்தில் உங்களோடு நாங்களும் பங்குகொள்கிறோம். அவருடைய குடும்பத்தாருக்கும் எங்களுடைய காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ரமணி : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, திரு. எட்டியப்பன் அவர்களுடைய மரணம் மிகுந்த வேதனை மிக்கது மட்டுமல்ல ; நம் நாட்டுக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்வதற்குள்—37 வயதானவர் அவர். இன்னும் பல பத்தாண்டுகள் அவர் இந்த நாட்டுக்குக் கடமை ஆற்றி இருக்க முடியும். ஆனால் — இந்த வயதிலேயே அவருக்கு இப்படிப்பட்ட அபாயம் நேர்ந்துவிட்டது. நல்ல கல்வி அறிவும், மக்கள் மத்தியிலே பிடிப்பும் உள்ளவர் என்பதால்தான் ஏற்கெனவே அவர் ஒன்றியத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். சட்டமன்றத் தேர்தலிலும் அவர் வெற்றி பெற்றிருக்கிறார். எனவே, அந்த மக்களுடைய உள்ளத்திலும் அவருடைய மறைவு மிகப்பெரிய துக்கத்தையும், வேதனையையும் உருவாக்கியிருக்கும். அவருடைய குடும்பத்தாருக்கும், இவ்வளவு இளம் வயதிலே ஒருவரை இழப்பது என்பது, ஒரு சிறந்த ஊழியரை இழப்பது என்பது ஒரு துக்கமான சம்பவமாகும். இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சிக்கு நாமெல்லாரும் நம்முடைய துக்கத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் நம் முன்னவர் அவர்கள் முன்மொழிந்துள்ள தீர்மானத்தோடு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் தன்னை இணைத்துக்கொண்டு எங்களுடைய ஆழ்ந்த துக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவரை இழந்து தவிக்கின்ற குடும்பத்தாருக்கும், மற்றும் உறுப்பினர்களுக்கும் எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஒரு நல்ல ஊழியராக இருந்தவரை திராவிட முன்னேற்றக் கழகமும் இழந்துள்ளது. அதனால் அந்தக் கழகத்திற்கும் இது ஒரு பேரிழப்பு. அதற்காகவும் எங்களுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னவர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இரங்கல் தீர்மானத்தில் என்னுடைய இரங்கலையும் இணைத்துக்கொள்கிறேன். மறைந்த சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. எட்டியப்பன் அவர்களுடைய எதிர்பாராத மரணம் உண்மையிலேயே அந்தப் பகுதி மக்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் ஒரு இழப்புதான். பொதுவாக சட்டமன்ற உறுப்பினர்களானாலும், பாராளுமன்ற உறுப்பி

னர்களானாலும் இரவு நேரங்களில் கார்களில் செல்வதைத் தவிர்ப்பது நல்லது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இரவு நேரத்தில் நாம் எவ்வளவுதான் கவனமாக வந்தாலும், எதிரே வரக்கூடியவர்கள் கவனக் குறைவாக வந்தால் உண்மையிலேயே இதுபோன்ற விபத்துக்களைச் சந்திக்க நேரிடும். இவ்வளவு இளமையான வயதில் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், இங்கே பணியாற்றிக் கொண்டிருந்த காலத்தில் அவர் மறைந்ததை எண்ணிப் பார்க்கும்போது உண்மையிலேயே மிகுந்த வேதனையாக இருக்கிறது. அவரைப் பிரிந்து வாடுகிற அவருடைய குடும்பத்தாருக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் என்னுடைய இரங்கலைத் தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

[10–15]

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மரணம் அடைந்த திரு. எட்டியப்பன் அவர்களுடைய இரங்கல் தீர்மானத்தில் அகில இந்திய ஜனதா தளத்தின் சார்பிலே பங்கு கொள்கிறேன். இளம் வயதிலே அவருடைய இந்த மரணமானது ஆறாத புண்ணாகும் நம் எல்லோருக்கும். 234 பேர்களிலே இளம் வயதினராக இருந்தவர் அவர். அவரைப் பற்றி தமிழக சட்டமன்றம் மட்டுமல்ல : எல்லா அரசியல்வாதிகளும், அரசியல் கட்சிகளும் நன்றாக அறிந்து, தெரிந்து இருக்கின்ற வகையில் நன்கு பாடுபட்டுக்கொண்டிருந்த ஒரு நல்ல அரசியல்வாதி. மரணத்திலே கால மரணம், அகால மரணம் என்பது உண்டு. இது அகால மரணத்தைச் சேர்ந்தது. பூ பூத்து, பிஞ்சு வைத்து, நன்கு முற்றி, பழுத்து அது கீழே விழுந்தால் அதை எடுத்துச் சாப்பிடலாம். ஆனால் இந்த மாதிரி இளம் வயதில் நடக்கிறது. எமனுக்கு தர்மராஜன் என்று பெயர் வைத்தான். எப்படித்தான் அந்தப் பெயரை வைத்தானோ தெரியவில்லை. நல்ல இளம் வயதினனாகப் பார்த்துப் பறித்துக் கொண்டு போய்விட்டான். அப்படிப்பட்ட புண்தான் ஆறாத புண். புண்ணிலே ஆறாத புண், ஆறுகிற புண் என்று இருக்கிறது. என்றைக்கும் இந்தத் துக்கம் ஆறாது. இந்த 234 மெம்பர்களும், என்னமோ திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டும்தான் அவர் சொந்தம் என்று நினைக்கக்கூடாது. நாட்டினுடைய தமிழ் மக்கள் எல்லோருக்கும் அவர் சொந்தம் என்று தான் நாம் நினைக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு நல்ல அரசியல்வாதி, தொண்டுள்ளம் கொண்ட திரு. எட்டியப்பன் அவர்களுடைய இந்த மரணமானது நமக்கு மட்டுமல்ல, நாட்டிற்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, அவருடைய குடும்பத்திற்கு மட்டுமல்ல. எல்லோருக்கும் உள்ள அந்தத் துயரமானது என்றைக்கும் ஆறாத புண்ணாக இருப்பதாலே அவர் செய்த அந்த நல்ல தொண்டை நாமும் விடாமல் செய்து, அவர் நினைத்த காரியத்தை நாம் உழைத்துச் செய்து, அவருக்கு நல்ல பெயரை வாங்கிக் கொடுத்தால்தான் அவருடைய ஆன்மா சாந்தியடையும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1989 அக்டோபர் 30] [திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

அவருடைய ஆன்மா சாந்தியடைய எல்லோரும் பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த அவையிலே உறுப்பினராக இருந்த திரு. எட்டியப்பன் அவர்களுடைய மறைவு குறித்து அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்த இரங்கல் தீர்மானத்தை என்னுடைய கட்சியின் சார்பிலே வழி மொழிந்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல முன் வருகிறேன்.

திரு. எட்டியப்பன் அவர்கள், சொற்ப காலம் தான் இந்த அவையிலே இருந்தாலும் கூட, எனக்கு அதிகமான பரிச்சயம் இல்லை என்று சொன்னாலும் கூட, பொது நிறுவனங்கள் குழுவிலே அவரோடு சேர்ந்து சில தினங்கள், சில மாதங்கள் பணியாற்றக் கூடிய நேரத்தில் அடக்கமான சுபாவமும், அனைவரிடத்திலும் அன்பாகப் பழகக் கூடிய ஒரு சிறந்த பண்பும் அவர்கள் பெற்றிருப்பதை உணர்ந்தேன்.

அதுவும் குறிப்பாக 37 வயதிலேயே அவருக்கு இப்படி ஒரு மறைவு ஏற்பட்டதற்காக நாம் அனைவரும் மிகவும் வருந்த வேண்டிய நிலையிலே இருக்கிறோம், அவர் நீண்ட நாள் இருந்து அந்தத் தொகுதிக்குப் பணியாற்றக்கூடியவர். அவருக்கு இப்படி ஒரு அகால மரணம், சம்பவம் ஏற்பட்டதற்காக நான் என்னுடைய வருத்தத்தை, அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்த இந்த இரங்கல் தீர்மானத்திலே காட்டிய உணர்வோடு என்னுடைய உணர்வையும் இணைத்து அவரை இழந்து நிற்கின்ற அந்தக் குடும்பத்தினருக்கும், அவர் சார்ந்திருக்கின்ற கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் என்னுடைய ஆழ்ந்த அனுதாபங்களையும் அவருக்கு என்னுடைய அஞ்சலியையும் தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

*திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களால் கொண்டு வரப்பட்ட மறைந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. எட்டியப்பன் அவர்களுடைய மரணம் குறித்த இரங்கல் தீர்மானத்தின் மீது ஒரு சில கருத்துக்களை, என்னுடைய அனுதாபங்களை தெரிவிக்க முன் வருகிறேன்.

இந்த அவை தொடங்குகின்ற நேரத்திலே கூட, நீங்கள் குறள் படிக்கின்றபோது சொன்னீர்கள் :

“நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு”

என்ற அளவுக்கு தொடங்குகிறபோது, நேற்றைக்கு இருந்த ஒரு மனிதன் இன்றைக்கு இல்லை என்கின்ற அந்த நிலையாமையை நீங்கள் இங்கே எடுத்து உணர்த்தினீர்கள். அந்த நிலையாமையை

[திரு. பொன். விஜயராகவன்] [1989 அக்டோபர் 30

நீங்கள் இங்கே எடுத்து உணர்த்தினாலும் கூட, இளம் வயதில் ஒரு நல்ல சட்டமன்ற உறுப்பினர், பழகுவதற்கு மிகுந்த இனிமையான ஒருவர், மிகுந்த பரிச்சயம் இல்லை என்று சொன்னாலும் கூட, குறித்த சில காலத்திற்குள்ளாகவே நெருங்கிப் பழகியவர். நல்ல அறிவு பூர்வமாக சிந்திக்கக் கூடிய ஒரு சட்டமன்ற உறுப்பினரை நாம் இழந்திருக்கிறோம். இளம் வயதிலேயே அகால மரணம் அவரை நம்மிடமிருந்து பறித்துக் கொண்டு விட்டது. அவரை இழந்து நிற்கின்ற அவர்களுடைய குடும்பத்தாருக்கும், அவருடைய இழப்பால் இன்றைக்குத் தங்களில் ஒருவரை இழந்து விட்டோம் என்று இருக்கக் கூடிய அவருடைய இயக்கமான, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

[10-20]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்களும், அவையில் வீற்றிருக்கின்ற அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த தலைவர்களும் வெளியிட்ட துயரத்தோடு என்னுடைய துயரத்தையும் இணைத்துக் கொள்ளுகின்றேன்.

பெரணமல்லூர் தொகுதி தன்னுடைய சட்டமன்ற உறுப்பினரை இழந்து விட்டது. இந்தச் சட்டமன்றத்திலே உள்ளவர்கள் தங்களுடைய சட்டமன்ற சக உறுப்பினர் ஒருவரை இழந்து விட்டார்கள். நான் என் தம்பியை இழந்து விட்ட துயரத்தோடு நின்று கொண்டிருக்கின்றேன்.

37 வயது முடிவடையாத பருவத்தில், நாட்டிற்கும், சமுதாயத்திற்கும், மொழிக்கும் பல்வேறு பணிகளை ஆற்ற வேண்டும் என்கின்ற நீங்காத வேட்கை கொண்டு, தந்தை பெரியார் அவர்களுடைய பகுத்தறிவுக் கொள்கைகளையும், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய அரசியல் இலட்சியங்களையும், தமிழ் உணர்வினையும் உள்ளத்திலே தேக்கி, பாடுபட்டுப் பணியாற்றிய ஒரு சமதர்மவாதி, திரு. எட்டியப்பன்.

இங்கே நம்முடைய மூப்பனார் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல, சில திங்களுக்கு முன்பு தன்னுடைய சகோதரனை இழந்து விட்ட திரு. எட்டியப்பன், ஏதோ ஒரு மனச் சங்கடத்தின் காரணமாக, தன்னுடைய உடன்பிறப்பையே இழந்து விட்டோம் என்கின்ற தாங்கொணாத சோகத்தின் காரணமாக எங்களைச் சந்திக்கின்ற போது எல்லாம், என் சகோதரனே போய் விட்டான்; நான் இன்னும் எவ்வளவு நாளைக்கு இருக்கப் போகிறேன் என்றே சொல்லுவார். ''அப்படி சொல்லாதே, நீ நீண்ட நாள் வாழ்வாய்'' என்றுதான் அவருக்கு நாங்கள் ஆறுதல் கூறி வந்தோம். ஆனால் சென்னை நோக்கி வந்து கொண்டிருந்த அவர், கார் விபத்திற்கு ஆளாகி, மருத்துவமனையிலே நினைவு இழந்து

கிடக்கிறார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டு, நாங்கள் எல்லாம் ஓடிச் சென்று பார்த்தோம். பிழைத்துக் கொள்ளக்கூடும் என்று ஓரளவு நம்பிக்கையோடு திரும்பி, இல்லம் வந்தடைவதற்குள்ளாக பிரிந்துவிட்டார் என்ற செய்தியைத்தான் கேள்விப்பட்டோம்.

நம்முடைய அருமை நண்பர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல, இரவு நேரங்களில் இது போன்ற பயணங்களிலே ஈடுபடுவது எவ்வளவு தவறானது என்பதை நானும் கூட என்னுடைய நண்பர்களுக்கு மாத்திரமல்ல, எல்லோருக்கும் பல நேரங்களிலே சொல்லியிருக்கின்றேன். நாம் எவ்வளவு எச்சரிக்கையாகப் பயணம் நடத்தினாலும், தாங்கள் எவ்வளவு வேகத்தில் செல்கிறோம், எந்தத் திக்கில் செல்கிறோம் என்று அறியாத சில வாகன ஓட்டிகள் இவ்வாறு பயணத்தின் குறுக்கே வருகிற காரணத்தால், இதுபோன்ற நினைக்கவே நெஞ்சு நடுங்குகின்ற சாவுகள் பலவற்றை நாம் சந்திக்க நேரிட்டிருக்கின்றது.

தன்னுடைய குடும்பத்திற்கு என்று எதையும் சேர்த்துக்கொள்ளக் கருதாமல், பொது வாழ்க்கையிலே ஈடுபட்ட காலம் தொட்டு, ஏன், சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பை ஏற்ற காலத்திற்குப் பிறகும் கூட, குடிசையிலிருந்தே வாக்குக் கேட்டு, குடிசையில் இருந்தே தன்னுடைய வாழ்வை முடித்துக் கொண்ட ஓர் உத்தம தொண்டன். அந்தத் தொண்டனை இழந்து கலங்கி இருக்கின்ற எங்களுக்கு இந்த அவையிலே உள்ள அனைத்துக் கட்சிகளினுடைய சார்பிலும் அக்கட்சிகளினுடைய தலைவர்கள் மொழிந்த ஆறுதலும், இரங்கலும் ஓரளவு எங்களுக்கு மன நிம்மதியை அளிக்கிறது. ஆறுதல் வழங்கியவர்களுக்கு எல்லாம் நன்றியைத் தெரிவித்து, இந்த இரங்கல் தீர்மானத்திலே என்னுடைய இதயத்தையும் இணைத்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், பேரவை முன்னவர் அவர்களும், அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த தலைவர்களும், நண்பர் திரு. எட்டியப்பனுடைய மறைவு குறித்து எடுத்துச் சொன்ன செய்திகளையும், இரங்கல் செய்தியையும் கேட்டு இந்த அவை உள்ளபடியே மெத்த வருத்தப்படுகிறது. அவர்களுடைய இரங்கலோடு சேர்த்து என்னுடைய இரங்கலையும் இணைத்துக் கொள்ள விரும்புகிறேன்.

நண்பர் திரு. எட்டியப்பன் மிகச் சிறந்த இனிய இயல்பு படைத்தவர். ஒரு பேரவைத் தலைவர் என்ற முறையில் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு அனைத்து உறுப்பினர்களும் என்னோடு நெருங்கிய தொடர்பு உடையவர்கள் என்ற முறையில், இனிய நண்பர், திரு. எட்டியப்பன் அவர்கள் அடிக்கடி என்னைச் சந்தித்து பல்வேறு வகையான கோரிக்கைகளுக்காக, பல்வேறு வகையான நட்பு தொடர்பான செய்திகளுக்காக, கருத்துக்களைப்

பரிமாறிக் கொள்வது உண்டு. அப்படிப்பட்ட நிலைகளில் எல்லாம் அவருக்கு இயன்றவரைக்கும் துணை செய்கின்ற அல்லது ஆறுதலாக விடை அளிக்கின்ற வாய்ப்பைப் பெற்றவன் என்ற முறையிலும், அவருடைய இனிய உள்ளத்தைப் புரிந்து கொண்டவன் என்ற முறையிலும் அவருடைய இழப்பு உள்ளபடியே ஈடு செய்ய முடியாத இழப்பு என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அதிலும் கடைசி கால கட்டத்தில் அவர் ஒரு திருமணத்திற்கு நாள் கேட்டு, அந்த நாளில் நான் கண்டிப்பாகக் கலந்து கொள் கிறேன் என்று உறுதி அளித்து, எதிர்பாராமல், நம்முடைய உள் ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய இல்லத் திருமணம் அதே நாளில் வைக்கப்பட்டு இருந்ததினால் அவருடைய ஆவலை நிறைவு செய்ய முடியாமற் போயிற்று.

(முற்பகல் 10-25)

அதற்குப் பிறகு, மீண்டும் என்னைச் சந்தித்து, கண்டிப்பாக அடுத்த சட்டமன்றக்கூட்டம் தொடங்கிய பிறகு நீங்கள் என்னு டைய தொகுதிக்கு வரவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண் டார். அப்படிப்பட்ட நிலையில்கூட, நானும் அவருக்கு உறுதி யளித்து, உறுதியாக உங்களுடைய தொகுதிக்கு, உங்களுடைய பகுதிக்கு வருகிறேன் என்று தெரிவித்தேன். ஆனால், நான் வெளி நாட்டில் இருந்தபோது அவர் மறைந்தார் என்ற செய்தி யைக் கேட்டபோது, உள்ளபடியே நான் அதிர்ச்சியடைந்தேன். ஒரு பேரவை என்று வந்த பிறகு, இந்த 9 மாத கால கட்டத்தில் மறைந்த உறுப்பினராக அவர் இடம் பெறுகிறார். அந்த வகை யில் கடந்த காலத்தில் மறைந்துபோனவர்களைப் பற்றிய இரங்கல், வருத்தமெல்லாம் நமக்கு நெஞ்சிலிருந்தபோதிலும், நம்மோடு உடன் பழகி, உடன் வாழ்ந்து, இன்னும் பல ஆண்டுகள் நம்மோடு சேர்ந்து தொண்டாற்றக் கூடிய வாய்ப்புபெற்ற நமது நண்பர் மறைந்துபோனது, உள்ளபடியே நமக்குப் பெரிய இழப் பாகும்.

அதே நேரத்தில், நிலையாமை என்பது ஒன்றுதான் இந்த உல கத்தில் நிலைத்த ஒன்றாக இருக்கிறது! இயற்கையை எத்தனை கோணத்தில், அறிவியல் கோணத்தில், வேறு கோணத்திலெல்லாம் நாம் வென்றாலும், மரணம் ஒன்றை மட்டும் நாம் வெல்ல முடியாது என்பதற்கான சூழ்நிலைகளை அது நெடுங்காலமாகப் பதித்துக் கொண்டே வந்திருக்கிறது.

உமர் கயாம்,

"இருந்து சென்ற முன்னோரின்
இடத்தில் எல்லாம் யாம் இன்று
விருந்து செய்து வாழ்கின்றோம்,
விகடம் சொல்லி மகிழ்கின்றோம்.

இருந்த இடம் விட்டு யாமும் இனி
எழுந்து சென்றால், இங்கிருந்து
விருந்து செய்வார் யார் யாரோ
விகடம் சொல்வார் யார் யாரோ ''

என்று கூறுகிறார்.

மேலும் '' ஃபிட்ஜெரால்டு '',

'' The bird of time has but a little way to fly,
And lo! the bird is on the wings. ''.

என்று கூறுவான்.

கவிமணி அவர்கள் அதைக் குறிப்பிடுகிறபோது,

'' தேரா வாழ்வின் பறவை, இன்னும்
செல்லும் தூரம் சிறிதேயாம்,
பாராய் பாராய் பறவை அதோ
பறக்கச் சிறகு விரித்ததடா ''

என்று சொன்னார்.

எனவே, தம்பி, திரு. எட்டியப்பன் அவர்கள், இளம் வயதில், இளம் பறவையாக இருந்து, இவ்வளவு விரைவில் தன்னுடைய சிறகை விரித்துப் பறந்து போவார் என்று நாம் எதிர்பார்க்க வில்லை. அவர் மறைவு நமக்குப் பேரிழப்பு. எனவே நாமும் நிலையாமை படைத்த இந்த உலகில் நிலையான செயல்களைச் செய்து, என்றென்றைக்குப் புகழால், பெயரால் நிலைத்து நிற்கக் கூடிய வாய்ப்பைப் பெறுவதற்கு அவருடைய மறைவு நமக்கு ஒரு பாடமாக, படிப்பினையாக இருக்கிறது என்று கூறி, அனைவருடைய இரங்கலோடு, நானும் சேர்ந்து என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக்கொண்டு, அவரை இழந்து தவிக்கிற குடும்பத்திற்கு, அனைவரது சார்பிலும், பேரவையின் சார்பிலும், தமிழ்நாட்டு மக்களின் சார்பிலும் இரங்கலைத் தெரிவித்து, அவருக்கு — மறைந்தவருக்கு மரியாதை தெரிவிக்கும் முறையில் பேரவை முன்னவர் கொண்டுவந்த தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித் துளிகள் எழுந்து மௌனம் சாதிக்குமாறு கேட்டுக்கொள் கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் மௌனமாக எழுந்து நின்றதன் மூலம், தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறைந்த உறுப்பினருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில், பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் ஒத்தி வைக்கப்படுகின்றன. பேரவை, மீண்டும் நாளை (31–10–1989) காலை 9-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 10-28 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

1. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு அமைச்சர்கள் மற்றும் சட்ட மன்றத் தலைவர்கள் (அரசு இல்லங்களுக்கு அறைக்கலன்கள் மற்றும் ஏனைய வசதிகள் செய்து கொடுத்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொதுத் (சட்டமன்றப் பிரிவு) துறையின் 2–1–1989 ஆம் நாளிட்ட 4 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

2. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு சட்டமன்ற (உறுப்பினர்கள் ஊதியங்கள் மற்றும் மருத்துவ ஈட்டுத் தொகை வழங்கல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பொதுத் (சட்டமன்றப் பிரிவு) துறையின் 3–8–1988 ஆம் நாளிட்ட 1171 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1951 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

3. விளம்பர வரிச் சட்டத்தினை மாற்றியமைப்பது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 17-11-1988 ஆம் நாளிட்ட 1427 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1983) 7 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

4. உதகமண்டலம் குதிரை பந்தய மைதானத்தில் நடைபெறும் பந்தயங்களுக்கு வரி விதிப்பது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 26–8–1988 ஆம் நாளிட்ட 1180 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு பந்தய வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1935) 10 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].